
ISBN:978-81-687272-7-4

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்



மா இராமலிங்கம்

செந்தமிழறிஞர்கள் 108

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in



அண்ணா நூற்றாண்டு நூலகம்


ANNA CENTENARY LIBRARY

DIRECTORATE OF PUBLIC LIBRARIES SCHOOL EDUCATION DEPARTMENT

https://www.annacentenarylibrary.org/pages/view/160-%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%87%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%AE%E0%AE%B2%E0%AE%BF%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AE%AE%E0%AF%8D_1939

செந்தமிழ்சிற்பிகள்

மா இராமலிங்கம் (1939)



அறிமுகம்

மா.இராமலிங்கம் (5.10.1939) ஒரு தமிழ் எழுத்தாளர் மற்றும் மொழிபெயர்ப்பாளர். இவர் 1981ன் தமிழுக்கான சாகித்திய அகாதமி விருது பெற்றவர். எழில்முதல்வன் என்ற பெயரில் அறியப்பட்டவர்.

வாழ்க்கைக் குறிப்பு

இராமலிங்கம் திருவாரூர் மாவட்டத்திலுள்ள திருத்துறைப்பூண்டியில் பிறந்தவர். இவர் 1964 ஆம் ஆண்டு தமிழக அரசின் கல்வித்துறையில் பணியில் சேர்ந்தார். சிறிது காலத்திற்குப்பின் இவர் கும்பகோணம் அரசு கலைக் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும்

பணிபுரிந்தார். தமிழ் இலக்கிய விமர்சனம் குறித்து ஏழு புத்தகங்கள் எழுதியுள்ளார். இவரது நவீன தமிழ் உரைநடை பற்றிய இலக்கிய விமர்சன நூலான புதிய உரைநடை 1981 ஆம் ஆண்டில் தமிழுக்கான சாகித்திய அகாதமி விருது பெற்றது.

இவர் உயர்நிலைக் கல்வியைத் திருத்துறைப்பூண்டியிலும், தமிழ் இளங்கலைப் பட்ட வகுப்பினைக் கும்பகோணம் அரசு கல்லூரியிலும் பயின்றவர். முதுலைப் பட்ட வகுப்பினைச் சென்னை மாநிலக்கல்லூரியில் பயின்று முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர். இதற்காகப் பல பரிசில்களைப் பெற்றவர். சென்னைப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக 1975 இல் முனைவர் பட்டம் பெற்றவர். 1964 முதல் 1974 வரை சென்னை மாநிலக் கல்லூரியில் துணைப்பேராசிரியராகப் பணியாற்றியவர். அதன் பிறகு மன்னார்குடி, இராமநாதபுரம், கோயமுத்தூர், இராசிபுரம், பொன்னேரி, கும்பகோணம் கல்லூரிகளில் பேராசிரியராகவும் துறைத்தலைவராகவும் பணிபுரிந்த பெருமைக்குரியவர். 1985 முதல் 2000 வரை திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக விளங்கி ஓய்வு பெற்றவர்.

வெளிவந்த நூல்கள்

நாவல் இலக்கியம் (1972)

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்(1973)

புனைகதை வளம்(1973)

அகிலனின் கலையும் கருத்தும்(1974)

விடுதலைக்குப்பின் தமிழ்ச்சிறுகதைகள்(1977)

புதிய உரைநடை(1978)

இலக்கியத் தகவு(1979)

திறனாய்வுநெறி(1983)

நோக்குநிலை(1984)

உரைகல்லும் துலாக்கோலும்(1989)

பனிப்பாறையும் சில தீப்பொறிகளும்(1990)

கவண்கற்களும் சிறகுகளும்(2000)

கவிதைகள்

இனிக்கும் நினைவுகள்(1966)

எங்கெங்கு காணினும்(1982)

இரண்டாவது வருகை(1985)

யாதுமாகி நின்றாய்(1986)

தமிழ்க்கனல்(1987)

எழில்முதல்வன் கவிதைகள்(2000)

(😊)(😊) @@@@@@@@@@ (😊)(😊)

எழில்முதல்வன் (மா இராமலிங்கம்) தனது இலக்கிய விமர்சன நூலான **'புதிய உரைநடை'**க்காக **1981-ம் ஆண்டு** தமிழுக்கான சாகித்திய அகாதமி விருது பெற்றார். இவர் பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர் மற்றும் நாவல், கவிதை, விமர்சனம் எனப் பன்முகத்தன்மை கொண்ட எழுத்தாளர் ஆவார்.

எழில்முதல்வன் சாகித்திய அகாதமி விருது விவரங்கள்:

- **விருது பெற்ற நூல்:** புதிய உரைநடை (இலக்கிய விமர்சனம்)
- **விருது வழங்கப்பட்ட ஆண்டு:** 1981
- **இயற்பெயர்:** மா. ராமலிங்கம்
- **சிறப்பு:** நவீன தமிழ் உரைநடை பற்றிய ஆய்விற்காக இந்த விருது வழங்கப்பட்டது.

முக்கிய தகவல்கள்:

- எழில்முதல்வன் பாவேந்தர் பாரதிதாசனின் குயில் இதழில் கவிதைகள் எழுதியவர்.
- இவர் கவிஞர் சுரதா நடத்திய இலக்கிய இதழில் கவிதைகள் படைத்துள்ளார்.
- **பிற படைப்புகள்:** இனிக்கும் நினைவுகள், எங்கெங்கு காணினும், யாதுமாகி நின்றாய், நோக்குநிலை.

- தமிழ்நாடு அரசின் பாவேந்தர் பாரதிதாசன் விருது உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

பேராசிரியர் மா. இராமலிங்கம்

https://sekalpana.blogspot.com/2009/05/blog-post_4350.html



1982 ஆம் ஆண்டு புதிய உரைநடை என்னும் நூலூக்குச் சாகித்திய அகதெமி விருதும்1983 இல் விடுதலைக்கு முன் தமிழ் சிறுகதை என்னும் நூலூக்கு தமிழ் வளர்ச்சித்துறை பரிசும்,1992 இல் கவிதை படைப்புக்குப் பாவேந்தர் பாரதிதாசன் விருதும்,1988 இல் நல்லாசிரியர் விருதும்,நாவல் இலக்கியம் என்னும் நூலுக்கு விருதும்,2008 இல் நிச்சயத்தார்த்தம் என்னும் குஜராத்தி மொழிபெயர்ப்பு நூலிக்கு சாகித்திய அகதெமி விருதும் பெற்ற பெருமைக்குரியவர் பேராசிரியர் மா.இராமலிங்கம்.இவர் இலக்கிய உலகில் எழில் முதல்வன் என்னும் புனைப்பெயரில் பல படைப்புக்களைப் படைத்துள்ளார்.ஒய்வு பெற்ற பின்பும் ஒயாது உழைத்துக் கொண்டு இருப்பவர். பல்வேறு மொழிகளில் உள்ள நூல்களைத் தமிழில் மொழிப்பெயர்ப்புச் செய்து கொண்டுள்ளார்கள்.

நாகை மாவட்டம் திருத்துரைப்பூண்டி என்னும் தாலுக்காவில் உள்ள தகட்டூர் என்னும் ஊரில் 5-10-1939 ஆம் ஆண்டு திருமிகு

வ.மாணிக்கம் திருமதி மா.இராமாமிருத அம்மையார் இணையருக்கு மகவாய் தோன்றினார்.உயர்நிலைக் கல்வி திருத்துறைப்பூண்டியிலும்,தமிழ் இளங்கலை கும்பகோணம் அரசு கல்லூரியிலும் பயின்று,முதுலை சென்னை மாநிலக்கல்லூரியில் பயின்று முதல் வகுப்பில் தேர்ச்சிப்பெற்று முதல் மாணவனாகத் திகழ்ந்தார்.முதுகலை பயின்ற காலத்தில் G.U .போப் விருதும் பல பரிசுகளையும் பெற்ற சிறப்புக்குரியவர்.

1963-64 இல் கோவை அரசுக்கல்லூரியில் துணை விரிவுராயாளராக பணிப்புரிந்து,பின்னர் 1964-73 இல் மாநிலக் கல்லூரியில் துணைப்பேராசிரியராகவும் ,1975-84 வரை பல்வேவேறு அரசு கலைக்கல்லூரிகளில் துறைத்தலைவராவும்,1985-2000 வரை திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகவும் இருந்து தமிழ் இலக்கிய உலகிற்குப் பல்வேறு ஆக்க பணிகளைச் செய்து பணிஓய்வு பெற்றுள்ளார்.

டாக்டர் மு.வ ,டாக்டர் கா.மீனாட்சி சுந்தரம் சுந்தரம் ,புலவர் பா.சு.மணியம் (மறைமலை அடிகள் மாணவர்,மறைமலை அடிகள் மீதுள்ள பற்றினால் இவர் கையில் மறைமலை என பச்சைக்குத்தி இருப்பாராம்) ஆகியோரிடத்துக் கல்வி கற்ற பெருமைக்குரியவர். பேராசிரியரிடம் பேசிக்கொண்டு இருந்த போது பாவேந்தர் பாரதிதாசனுடன் தாம் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பினை நினைவுகூர்ந்தார். இவருடைய முதல் கவிதை1958 –இல் பாரதிதாசன் அவர்கள் நடத்திய குயில் பத்திரிக்கையில் வெளிவந்ததுள்ளது.அப்போது பாவேந்தர் அவரைப் பாராட்டி குயில் பத்திரிக்கையில் ஒரு குறள் வெண்பா எழுதுகின்றார்.

எழில்முதல்வன் நல்லநல்ல செய்யுள் எழுதும்
தொழில்முதல்வன் ஆகின்றான் சூழ்ந்து.

பாவேந்தருக்குப் பொடி என்றால் மிகுந்த விருப்பமாம் எப்பொழுதும் பொடி போட்டுக் கொண்டு இருப்பாராம்.அதுவும் சண்முகம் பட்டப்பொடிதான் பாவேந்தருக்குப் பிடித்ததாம்.ஒரு முறை பாவேந்தரைக் காணச் செல்லும் போது பொடி வாங்கிக் கொண்டு சென்றாராம் அதற்கு பாவேந்தர் அவர் மனைவியிடம்,

ஒரு பொடியன் வரும்போதே பொடி வைத்துக் கொண்டு வருரான் பாரு

என்று சிரித்துக்கொண்டே கூறினாராம்.அவருடன் பேசி விட்டுக் கிளம்ப முற்படுகையில் ,

இராமலிங்கு போவாயேல் என்மனம் வாடும்
இராமலிங்கா சற்றே இரு.

என ஒரு குறள் வெண்பாவைக் கூறிசிறிது நேரம் இருக்கச் சொன்னாராம்.

இவரும் கவிஞர் சுரதாவும் நெருங்கிய நண்பர்களாக இருந்துள்ளனர்.கவிஞர் சுரதா அவர்கள் நடத்திய இலக்கியம் என்னும் இதழில் பல கவிதைகளை எழுதியுள்ளார்.

தமிழுக்குத் தொண்டாற்றிய பெருமழைப் புலவருடன் நெருங்கிய தொடர்புடையவராக இருந்துள்ளார்.ஒரு முறை அவரை சந்திக்கச் செல்லும் போது நடந்த நிகழ்வினைப் பகிர்ந்து கொண்டார்.

இவருக்கு பதினேழு வயது இருக்கும் போது பெருமழைப் புவரைச் சந்திக்க அவரது ஊரான மேல பெருமழைக்குச் சென்றுள்ளார்.அப்போது ஒரு சிறிய கூரைவீட்டில் பெருமழைப்புலவர் வசித்துக்கொண்டிருந்தாராம்.அவர் ஒரு

விவசாயி,அவர் தான் பெருமழைப் புலவர் என்று அறிமுடியாத படி நோஞ்சான் உடம்புடன் காட்சியளித்தாராம். இச் சிறுவயதிலேயே இவ்வளவு ஆர்வத்துடன் என்னைத்தேடி வந்துள்ளாயே என்று மகிழ்ந்தாராம்.இந்த ஊரில் உள்ள ஒருவர் கூட என்னை மதிப்பது கிடையாது,(வாழும் காலத்தில் எந்த அறிஞர்களும் போற்றப்படுவதிலை,)ஏதோ கிறுக்கிக் கொண்டுள்ளான் என்று நினைப்பார்கள் நீ எவ்வளவு தூரம் என்னை தேடிக்கொண்டு வந்து மிக்க மகிழ்ச்சியாக உள்ளது என்று கூறி, மதிய உணவினை இங்கு உண்டு விட்டுத்தான் செல்லவேண்டும் என்று சொல்லி, பூவரசு இலையினைப் பறித்து, தனது கையினாலேயே தைத்து அதில் உணவு படைத்தாராம் .மிக எளிமையான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு தமிழுக்கு மிக அளப்பறிய பணிகளைச் செய்தவர் பெருமழைப்புலவர்.பேராசிரியர் மா.இராமலிங்கம் பெருமழைப் புலவரின் உரைநயம் குறித்த கட்டுரையைக் குயில் இதழில் எழுதியபோது, மிக நன்றாகவுள்ளதாக பாராட்டினாராம் பொருமழைப் புலவர்.

புத்திலக்கிய தடத்தில் புதிய ஒளியைப் பாய்ச்சியவர்களில் பேராசிரியரும் ஒருவர்.இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு மேற்கொள்ளும் போது புத்திலக்கியம் தொடர்பான ஆய்வினையே மேற்கொண்டார்.

அப்பொழுது இரா.தண்டாயுதம் அவர்கள் நாவல் இலக்கியம் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ள இவர் சிறுகதை தொடர்பான ஆய்வினை மேற்கொண்டு ஆய்வினை நிகழ்த்தியுள்ளார். இவர் எழுதிய முதல் நூல் கவிதை நூல் இனிக்கும் நினைவுகள்என்பதாகும்.இந்நூல் 1965 இல் வெளிவந்துள்ளது.இதே ஆண்டில் தான் கமலா அம்மையாரைத் தனது வாழ்க்கைத் துணைவியாக்கிக்கொண்டார்.

அதன்பிறகு 1972 –இல் நாவல் இலக்கியம் (the theory of novel)

என்னும் நூல் வெளிவந்தது.இதே ஆண்டில் இருபதாம் நூற்றாண்டில் தமிழிலக்கியம் என்ற நூலும்,1977 இல் புதிய உரைநடை என்னும் நூலும்,அகிலனின் கலையும் கருத்தும்,பொய்யான இரவுகள்(சிறுகதை),அதற்கு விலையில்லை(சிறுகதை) ,நாளைக்கு இதே க்யூவில்(சிறுகதை)பயணம் தொடரும்(கவிதை)இரண்டாவது வருகை,நோக்கு நிலை,கவண்கறக்களும் சிறகுகளும்,எழில் முதல்வன் கவிதைகள் எனப் பல நூலுக்களைப் படைத்துள்ளார்.பல்வேறு சிறு பத்திரிக்கைகளில் பல கட்டுரைகள் எழுதியுள்ளார்.

2004-இல் அழகிய மணவாளஜீயர் அவர்களுடைய பகவத்கீதை வெண்பா என்னும் நூலைத் தொகுத்துப் பதிப்பித்துள்ளார்.

பாகிஸ்தான் கதைகள்,பஞ்சாபி நாவல்,குஜராத்தி நாவல் ,வங்க நாவல் போன்றவற்றை மொழிபெயர்ப்புச் செய்துள்ளார்.இப்பொழுதும் செய்து கொண்டுள்ளார். சிங்கப்பூர் ,மலேசியா யூக்கோசுலோவாகிய போன்ற நாடுகளுக்குச் சென்று தமிழ் தொண்டு ஆற்றியுள்ளார். இவ்வூர்களுக்கு இவரை அரசே அனுப்பி வைத்து சிறப்பு.அனைத்திந்திய கவிதை அரங்குகளில் பங்கு கொண்டு பிறமொழி கவஞர்களிடம் தொடர்புடையவர்.

ஓய்வுக்குப் பிறகு தஞ்சையில் பவானி நகர் 4,கங்கைத்தெருவில் தமிழ்க்குடில் என்ற இல்லத்தில் தனது தமிழ்ப்பணியை இடையறாது ஆற்றிக்கொண்டுள்ளார்.

பேராசிரியர் அவர்களுடன் பேசிக்கொண்டு இருக்கும் போது திருக்குறளுக்கு நாளும் ஒரு உரை வருவது சரியில்லை.திரும்ப திரும்ப ஒரே மாதிரியாக இருக்கு அவற்றைத் தடை செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார்.இலக்கிய உலகில் திறனாய்வு போக்கு இன்னும் செழுமையுறவேண்டும் எனவும்,நல்ல தரமான

இலக்கியப் படைப்புகள் வெளிவரவேண்டும் என்றும் கூறினார்கள்.

பேராசிரியர் இல்லம்



பேராசிரியரும் அவரது துணைவியாரும்





பேராசிரியர் மா.இராமலிங்கம்

(எழில்முதல்வன்)

https://muelangovan.blogspot.com/2014/06/blog-post_15.html



பேராசிரியர் மா. இராமலிங்கம் (எழில்முதல்வன்)

தமிழகத்தின் கல்வி வரலாறு பல்லாயிரம் பேராசிரியர்களைக் கண்டுள்ளது. ஒவ்வொருவரும் தங்கள் அறிவாலும் உழைப்பாலும் பல்துறைப் பங்களிப்பாலும் இந்த வரலாற்றின் பக்கங்களில் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்துள்ளனர். அவ்வகையில் பாரதிதாசன் பல்கலைக்கழகம் என்னும் உயர்கல்வி நிறுவனத்தின் தமிழ்த்துறையை மிகச் சிறப்பாக வழிநடத்திப் பல நூறு மாணவர்கள் தமிழாராய்ச்சித்துறையில் கால்பதிக்க வழிகண்ட பெருமை அறிஞர் மா. இராமலிங்கம்(எழில்முதல்வன்) அவர்களுக்கு உண்டு.

சங்க இலக்கியம், சமய இலக்கியம், சமகால இலக்கியம் எனப் பல்துறையிலும் சுடர்மிகு அறிவுபெற்ற பேராசிரியர் மா. இரா. அவர்கள் மொழிபெயர்ப்புத்துறையிலும் ஆக்கப்பணிகள் பலவற்றைச் செய்துள்ளவர். புதினத்துறையில் ஆய்வுகள் பல நடைபெற இவர் காரணமாக இருந்தவர். தமிழ் மரபுப்பாடல்கள், புதுப்பாக்கள் வரைந்தவர். தமிழக அளவில் அனைவரின் கவனத்தையும் ஈர்த்த இவரின் புதிய உரைநடை என்னும் அரிய நூலுக்கு இந்திய அரசின் சாகித்ய அகாதெமி பரிசு இவருக்குக் கிடைத்தது. தமிழ் இலக்கிய உலகில் இந்த நூலுக்கு என்றும் தனிமதிப்புண்டு.

மாணவர்களை விடுதலையாகச் சிந்திக்கச் செய்து, தானே நீச்சலடித்துக் கல்விக்கடலைக் கடக்கச் செய்யும் அதிசய ஆற்றல் மா. இரா. அவர்களுக்கு உண்டு. இவர் உரையாற்றும்பொழுது புதுமைப் பாதைகள் சிலவற்றை அடையாளம் காட்டுவார். செக்குச் சுழற்சிகள் கொண்ட சிந்தனைகளைத் தவிர்த்து, புதிய ஒளிக்கீற்றுகள் இவர் எழுத்தில் மின்னும். அலுவல்சார் பணிகளில் சிறப்பாகச் செயல்பட்ட மா.இரா. அவர்கள் இப்பொழுது விருப்பமான பணிகள் செய்வதை வேள்வியாக்கிக்கொண்டுள்ளார். தமிழ்த்தவம் செய்யும் இப்பெருமகனாரை அண்மையில் அவர் இல்லில் கண்டு உரையாடி அவர்தம் வாழ்க்கைக்குறிப்பைப் பெற்றுவந்தேன். தமிழுலகின் பார்வைக்கு அவரின் வரலாற்றையும் பெருமிதப் பணியையும் மாணாக்கனாகிய யான் பணிந்து வைக்கின்றேன்.



அறிஞர் மா. இரா.

பேராசிரியர் மா.இராமலிங்கம் அவர்கள் நாகை மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டத்தில் உள்ள தகட்டூர் என்னும் ஊரில்

1939 ஆம் ஆண்டு பிறந்தவர். பெற்றோர் திருவாளர்கள் வ. மாணிக்கம் திருமதி மா. இராமாமிருத அம்மையார். உயர்நிலைக் கல்வியைத் திருத்துறைப்பூண்டியிலும், தமிழ் இளங்கலைப் பட்ட வகுப்பினைக் கும்பகோணம் அரசு கல்லூரியிலும் பயின்றவர். முதுலைப் பட்ட வகுப்பினைச் சென்னை மாநிலக்கல்லூரியில் பயின்று முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர். இதற்காகப் பல பரிசில்களைப் பெற்றவர். சென்னைப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக 1975 இல் முனைவர் பட்டம் பெற்றவர்.

1964 முதல் 1974 வரை சென்னை மாநிலக் கல்லூரியில் துணைப்பேராசிரியராகப் பணியாற்றியவர். அதன் பிறகு மன்னார்குடி, இராமநாதபுரம், கோயமுத்தூர், இராசிபுரம், பொன்னேரி, கும்ப கோணம் கல்லூரிகளில் பேராசிரியராகவும் துறைத்தலைவராகவும் பணிபுரிந்த பெருமைக்குரியவர். 1985 முதல் 2000 வரை திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக விளங்கிப் பணிஓய்வு பெற்றவர்.

மா. இராமலிங்கம் அவர்களின் தமிழ்க்கொடை:

நாவல் இலக்கியம் (1972)
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்(1973)
புனைகதை வளம்(1973)
அகிலனின் கலையும் கருத்தும்(1974)
விடுதலைக்குப்பின் தமிழ்ச்சிறுகதைகள்(1977)
புதிய உரைநடை(1978)
இலக்கியத் தகவு(1979)
திறனாய்வுநெறி(1983)

- நோக்குநிலை(1984)
- உரைகல்லும் துலாக்கோலும்(1989)

பனிப்பாறையும் சில தீப்பொறிகளும்(1990)
கவண்கற்களும் சிறகுகளும்(2000)

கவிதைகள்


- இனிக்கும் நினைவுகள்(1966)
- எங்கெங்கு காணினும்(1982)
- இரண்டாவது வருகை(1985)
- யாதுமாகி நின்றாய்(1986)
- தமிழ்க்கனல்(1987)
- எழில்முதல்வன் கவிதைகள்(2000)

புனைகதை நூல்கள்

பொய்யான இரவுகள்(1973)
அதற்கு விலையில்லை(1974)
நாளைக்கும் இதே கியூவில்(1985)
வாழ்க்கை வரலாறு
பேராசிரியரியப் போராளி(2013)

மொழிபெயர்ப்புகள்

மகாகவி உள்ளூர்(1986)
ஜதீந்திரநாத் சென்குப்தா(1992)
பாபா பரீத்(1994)
நிச்சய தாம்பூலம்(2008)
பொழுது புலர்ந்தது(2009)
பாகிஸ்தான் கதைகள்(2010)
கபீரின் நூறு பாடல்கள்(2011)
கிழக்கு- மேற்கு பாகம்1(அச்சில்)



பதிப்பித்த நூல்கள்

Selected Poems of Bharathidasan(in English)
Bharathidasan Centenary Souvenir(1991)
Velvi (வேள்வி) A Collection of seminar Papers in Tamil(1991)
Medieval Indian Literature in English Translation, Tamil Literature(1100-1800).
உலகத் திருக்குறள் மாநாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகள்(2000)
உலகத் திருக்குறள் மாநாட்டு மலர்
பகவத் கீதை வெண்பா(2004)

மா.இராமலிங்கம் அவர்கள் பெற்ற விருதுகளும் சிறப்புகளும்:

மா.இரா அவர்களின் புதிய உரைநடை நூலுக்கு 1982 இல் இந்திய அரசின் சாகித்ய அகாதெமி விருது கிடைத்தது. சாகித்ய அகாதெமியின் பொதுக்குழு உறுப்பினராகவும் (1988-92), செயற்குழு உறுப்பினராகவும் இருந்து பணியாற்றியவர், தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை இவர் எழுதிய விடுதலைக்குப் பின் தமிழ்ச்சிறுகதைகள் என்ற நூலுக்குப் பரிசு வழங்கிப் பாராட்டியுள்ளது. பாவேந்தர் பாரதிதாசன் விருதினை 1991 இல் பெற்றுள்ளார். மொழிபெயர்ப்புக்கான நல்லி குப்புசாமி செட்டி, திசை

எட்டும் விருதினைப் பெற்றவர். பாண்டித்துரைத் தேவர் விருதினையும் பெற்றவர். திருச்சிராப்பள்ளித் தமிழ்ச்சங்கம் இவருக்கு மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை விருதினை வழங்கி 2006 இல் பாராட்டியுள்ளது. மேலும் பல்வேறு அமைப்புகள் திறனாய்வுக்குரிசில், சிலம்பாய்வுச்செல்வர், தமிழ்மாமணி
விருது, ஆய்புல அண்ணல் விருது, குறள் ஞாயிறு விருது ஆகியவற்றை வழங்கிப் பாராட்டியுள்ளன.

மா.இரா. அவர்கள் கருத்தரங்குகளில் கலந்துகொள்ள மலேசியா, யுகோசுலேவியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சென்று வந்துள்ளார். இந்தியாவின் பல மாநிலங்களில் நடைபெற்ற கருத்தரங்குகள், பணிமனைகளில் ஆயுவுரைஞராகக் கலந்துகொண்டு கருத்துரை வழங்கியுள்ளார்.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் நடத்திய தமிழகப் புலவர் குழு என்னும் அமைப்பில் இருபதாண்டுகள் உறுப்பினராக இருந்து பணியாற்றியவர். ஓங்குதமிழ் என்னும் இதழின் ஆசிரியராக இருந்து பணிபுரிந்தவர். புவனேசுவர் நகரத்திலிருந்து வெளிவந்த உதயதாரகை என்னும் ஆங்கில இதழின் பதிப்பாசிரியர் குழுவில் இரண்டாண்டுகள் இருந்து பணிசெய்தவர். இவர்தம் கவிதைகளை ஆராய்ந்து மலைச்சாரலும் நெருப்பு அருவிகளும் என்னும் தலைப்பில் திரு. செல்வசேகரன் அவர்கள் ஒரு நூல் எழுதி வெளியிட்டுள்ளார்.

EAST - WEST என்னும் புதினத்தின் இரண்டாம் பகுதியை மொழிபெயர்த்து முடிக்கும் நிலையில் உள்ளார். மேலும் வட இந்திய ஞானியான சுவாமி இராமதீர்த்தர் என்பவரின் வாழ்வும் பணியும் குறித்த பெரிய நூலொன்றை எழுதி வெளியிடும் திட்டத்துடன் பேராசிரியர் மா. இராமலிங்கம் அவர்கள் செயல்பட்டு வருகின்றார். நிறைவாழ்வு ஐயா அவர்களுக்கு அமைய நெஞ்சார்ந்த வாழ்த்துகள்.



மு.இளங்கோவன், பேராசிரியர் மா.இராமலிங்கம்

பேராசிரியர் மா.இரா. அவர்களின் முகவரி:
முனைவர் மா. இராமலிங்கம்(எழில்முதல்வன்)
தமிழ்க்குடில், எண் 4, பவானி நகர், தஞ்சாவூர்- 613 004

என் பேராசிரியர் மா.இராமலிங்கம்

(எழில்முதல்வன்)

https://muelangovan.blogspot.com/2009/04/blog-post_11.html

முத்தமிழறிஞர் கி.ஆ.பெ.விசுவநாதன் அவர்களிடம் நான் கவிதைப்போட்டிக்கு உரிய முதல்பரிசு பெறுதல்(1992). பின்பகுதியில் பேரா.மா.இராமலிங்கம், பேரா.அரு.மருததுரை

புதுவைப் பல்கலைக்கழகத்தில் இளம்முனைவர் பட்ட ஆய்வு செய்துகொண்டிருந்தேன் (1992-93). அப்பொழுது பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்ட ஆய்வு செய்ய நிதியுதவி நல்கும் ஒரு விளம்பரம் வந்தது. விண்ணப்பம் செய்தேன். நேர்காணல் வந்தது.பாரதியார் அறக்கட்டளை சார்பில் அந்த நிதியுதவி வழங்கப்படுவதாகவும் குறிப்பு இருந்ததாக நினைவு.

நேர்காணலில் ஆங்கிலப் பேராசிரியர் கா.செல்லப்பன் ஐயாவும் என் பேராசிரியர் மா. இராமலிங்கம் அவர்களும் இருந்தார்கள் 50 பேருக்கு மேல் நேர்காணலுக்கு வந்திருந்தனர். என் சான்றிதழ்கள், மதிப்பெண், கல்வி ஈடுபாடு கண்டு நல்ல வினாக்கள் கேட்டனர். நானும் இயன்ற விடை தந்தேன். நேர்காணலுக்கு முன்பாக ஓர் எழுத்துத் தேர்வும் நடந்தது.

பேராசிரியர் முனைவர் அரு.மருததுரை, முனைவர் பட்ட ஆய்வாளர் மோ.தமிழ்மாறன் (இப்பொழுது சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்) எனக்கு அப்பொழுது அறிமுகமானார்கள். (சில ஆண்டுகளுக்கு முன் பாவேந்தர் நூற்றாண்டு விழாவைப் பல்கலைக் கழகம் கொண்டாடியபொழுது பல்கலைக்கழக அளவில் நடைபெற்ற கவிதைப் போட்டியில் யான் முதல் பரிசுபெற்றவன். இந்த விவரம் கூறி, அப்பொழுது பேராசிரியர் அரு.மருததுரை உள்ளிட்டவர்களைப் பரிசுபெற வந்தபொழுது கண்டுள்ளேன் எனவும் கூறி, அறிமுகம் ஆனேன். முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.விசுவநாதன் அவர்கள் திருக் கையால் 500 உரூவா முதல் பரிசைப் பல்கலைக்கழகம் வழங்கியது.)

சில மாதத்தில் எனக்குப் பல்கலைக்கழகத்தில் இணைவதற்கு ஆணை வந்தது. உடன் திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகம் சென்று நண்பர் நாராயணநம்பி அவர்களின் உதவியுடன் பல்கலைக்கழகத்தில் சேர உரிய படிவங்கள் வாங்கினேன். அப்பொழுது கோடை விடுமுறை. அந்தப் பருவத்தில் (சூன்,சூலை) சேர்ந்தால் நல்லது. இல்லையேல் சில மாதம் காத்திருக்கவேண்டும் என்றனர். உடனடியாகப் பல்கலைக்கழகத்தில் இணைய விரும்பினேன்.

என் பேராசிரியர் மா.இரா. அவர்கள் அப்பொழுது திருச்சிராப்பள்ளி உறையூரில் தங்கியிருந்தார். தமிழ்த்துறையிலிருந்து தொலைபேசியில் பேசி அவரைச் சந்திக்க இசைவு பெற்றேன். அவரை இல்லம் சென்று கண்டு வணங்கினேன். உரிய படிவங்களில் கையொப்பம் இட்டு, நான் அவர் மேற்பார்வையில் ஆய்வு செய்வதற்கு இசைவு வழங்கினார். எனக்கு அளவுக்கு அதிமான மகிழ்ச்சி. தமிழகத்தின் புகழ்பெற்ற அறிஞர் ஒருவரின் மாணவனாக முறைப்படி இணைந்துள்ளமையே என் மகிழ்ச்சிக்கு அடிப்படைக் காரணம். ஆய்வுக்கு என்ன தலைப்பு எடுக்கலாம் எனப் பேராசிரியர் கேட்டார்கள். எனக்குக் கவிதைத் துறையில் ஈடுபாடு. எனவே கவிதை குறித்துத் தலைப்பு அமையலாம் என்றேன். அவர்களும் "இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதை: பாரதிதாசன் பரம்பரை விளக்கம்,வரலாறு மதிப்பீடு" என்று தலைப்பை உறுதி செய்தார்கள்.

ஆய்வு மாணவனாக நான்(1995)

ஒரு நல்ல நாளில் பல்கலைக்கழகத்துக்கு ஆய்வுமாணவனாக அறிமுகம் ஆனேன். ஆய்வுத் துறைகளை முன்பே புதுவைப் பல்கலைக்கழகத்தில் கற்றவன் ஆதலின் என் பேராசிரியர் ஆய்வுத் தொடர்பாகச் சொல்லும் செய்திகளை உடனுக்குடன் புரிந்துகொண்டு செய்யும் அளவிற்கு யான் அணியமாக இருந்ததால் எனக்கு முழு விடுதலை தந்தார்கள்.உரிய அறிஞர்களைச் சந்தித்துவர அனுமதி தந்தார்கள்.அவர்கள் வழியாக உவமைப் பாவலர் சுரதா உள்பட தமிழகத்தின் பல கவிஞர்கள் எனக்கு அறிமுகம் ஆனார்கள்.எழில்முதல்வன் அனுப்பினார் என்றால் எனக்கு ஒரு சிறப்பு இருப்பதைப் போகும் இடங்களில் எல்லாம் உணர்ந்தேன்.ஆய்வுத் தொடர்பாகப் பேராசிரியர் எனக்கு முழு

விடுதலை வழங்கி என் போக்கில் ஆய்வு செய்ய வழிவிட்டமைக்கு அவர்களுக்கு யான் என்றும் நன்றிக்கடன் பட்டவனாவேன்.

மூன்றாண்டுகள் அவரிடம் ஆய்வு செய்யும் பேறு எனக்குக் கிடைத்தது.நல்ல பட்டறிவுகள் எனக்குக் கிடைத்தன.மிகப்பெரிய செய்தி என்பதையெல்லாம் தம் அறிவுத்திறமையால் மிக எளிதாக விளக்குவார்.அவரை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளாமல் விட்டுவிட்டமையை இப்பொழுது நினைத்தும் நான் வருந்துவதுண்டு.எழில்முதல்வன் அவர்களுக்கு ஈடுபாடான துறை திறனாய்வு,புதின இலக்கியம்,சிறுகதை,கவிதை என அறிஞர் உலகம் அறியும்.ஆனால் அவருக்குச் சிலப்பதிகாரத்தில் இருந்த ஈடுபாடு பலருக்குத் தெரியாது.அவரின் சிலப்பதிகாரப் புலமைக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்பேன்.அந்த அளவு சிலம்பைக் கற்றவர்கள். பொழிவாற்றியவர்கள்.நல்ல கட்டுரைகள் பலவற்றை எழுதியவர்.ஆய்வு என்னும் ஒற்றைக் கொம்பை யான் பற்றிக்கொண்டதால் அவரின் பிற துறை ஆளுமைகளை அறியாமல் இருந்துவிட்டேன்.இப்பொது எண்ணி எண்ணி ஏங்கி என்ன பயன்?.

பேராசிரியர் ஒவ்வொரு கிழமையும் நடக்கும் துறைசார் கருத்தரங்கில் கலந்துகொண்டு பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் படிக்கும் கட்டுரைகள் குறித்து கருத்துகளைச் சொல்லும்பொழுது அரங்கம் அமைதியாகக் கிடக்கும். தமிழகத்தின் புகழ்பெற்ற அறிஞர்களை அழைத்துப் பல்வேறு கருத்தரங்குகள் நடத்தியவர். பல சொற்பொழிவுகளுக்கு வழி வகுத்தவர். அவ்வகையில் தொல்காப்பியக் கருத்தரங்கு பொள்ளாச்சி அருட்செல்வர் நா.மகாலிங்கம் அவர்களின் உதவியால் நடத்தியது, எழுத்துச் சீர்திருத்தம் குறித்த கருத்தரங்கு, சாகித்திய அகாதெமியுடன் இணைந்து நடத்திய ஒரு கருத்தரங்கு இவையெல்லாம் குறிப்பிடத்தக்கன (இந்தக் கருத்தரங்கில் கோமல் சுவாமிநாதன், இளைய பாரதி, நஞ்சுண்டன் உள்ளிட்டவர்களுடன் உரையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது).

ஆய்வு மாணவனாக இருக்கும் பொழுது, என் பலவாண்டு முயற்சிக்குப் பிறகு "விடுதலைப் போராட்ட வீரர் வெ.துரையனார் அடிகள்" நூல் வெளியீட்டுக்கு அழகிய அணிந்துரை ஒன்று வழங்கியமையும் நான் திருநெல்வேலித் தனித்தமிழ் இலக்கியக் கழகத்தில் பாவலர் முடியரசனார் பற்றி ஆய்வுக்கட்டுரை எழுதித்

தங்கப்பதக்கம் பெற்றபொழுது என் படத்தைத் தமிழ்த்துறையில் வைக்கவேண்டும் அது எதிர்கால மாணவர்களுக்கு எடுத்துக்காட்டாக அமையும் என்று வற்புறுத்தியதற்கும் என்றும் அவர்களுக்கு நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன்.

மா.இராமலிங்கம் என்னும் இயற்பெயருடைய என் பேராசிரியர் திறனாய்வுலகில் எழில்முதல்வன் என்ற பெயரில் நன்கு அறிமுகமானவர்கள். பாவேந்தரின் குயில் இதழில் எழுதிய பெருமைக்கு உரியவர். சுரதா, அகிலன் உள்ளிட்ட எழுத்தாளர்களிடம் நன்கு பழகியவர். சாகித்திய அகாதெமியின் பரிசில் பெற்றவர். இவர்தம் புதிய உரைநடை நூல் இவரின் புதிய சிந்தனைக்கு எடுத்துக்காட்டாகும். நோக்குநிலை என்னும் நூலும் குறிப்பிடத்தக்க நூலாகும். வேள்வி என்ற இதழையும் இவர் நடத்தியவர். ஓங்குதமிழ் என்ற இதழைத் தமிழகப்புலவர் குழுவுக்காக நடத்தியவர். படைப்பும் ஆய்வும் இரண்டு கண்ணெனப் போற்றியவர். எதனையும் புதுமையாகச் சிந்திக்கவும் சொல்லவும் வல்லமை பெற்றவர். இவரின் மாணவர்கள் பலரும் உயர்நிலையில் பல இடங்களில் உள்ளனர்.

பாரதிதாசன் பல்கலைக்கழக வரலாற்றில் மா.இராமலிங்கம் என்ற திருப்பெயர் பெருமைக்குரிய பெயராக விளங்கும்.

மா.இராமலிங்கம் அவர்கள் தஞ்சை மாவட்டம் தகட்டூரில் பிறந்தவர் (பெருமழைப் புலவர் பற்றி நன்கு அறிந்தவர், உறவினரும்கூட). சென்னை மாநிலக்கல்லூரியில் பயின்றவர். அக்கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியைத் தொடங்கினார். குடந்தை அரசு ஆடவர் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகவும், பின்னர் பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராகவும் விளங்கியவர். மரபுக்கவிதைகள் வரைவதிலும், புதுக்கவிதை வரைவதிலும் வல்லவர்.

மரபுக்கவிதை நூல்களாக இனிக்கும் நினைவுகள்(1966), எங்கெங்கு காணினும்(1982), யாதுமாகி நின்றாய்(1990), புதுக்கவிதை நூல்களாக இரண்டாவது வருகை(1985), பயணம் தொடரும் (1990) என்ற நூல்களைத் தந்தவர். மா.இராமலிங்கம் அவர்கள் எழுதியுள்ள கவிதை நூல்களைக் கற்கும்பொழுது புதிய சிந்தனைகளுக்கு


வழிவகுப்பது போன்றே சங்க இலக்கியம், சமய இலக்கியம், பாரதி, பாரதிதாசன், சுரதா படைப்புகளின் செல்வாக்கினைக் காண முடிகிறது.

மா.இராமலிங்கம் அவர்கள் 1960-71 காலத்தில் எழுதிய கவிதைகள் "எங்கெங்கு காணினும்" என்னும் பெயரில் நூலாக வெளிவந்துள்ளது. இந்நூலில் 75 மரபுக்கவிதைகள் இடம் பெற்றுள்ளன. பாவேந்தர் பாடல்களைப் போல இயற்கை, காதல், தமிழ் என்ற நிலைகளில் கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

புதுக்கவிதைகள் அடங்கிய நூலைக் கற்கும்பொழுது இவரின் புதுப்பார்வைகளும் கவிதை வீச்சுகளும் புலப்படும். சமுதாயக் கொடுமைகளை நினைவூட்டி அவற்றிற்குத் தீர்வுகாணும் நோக்கில் படைப்புகள் உள்ளன. இவை பற்றி என் முனைவர் பட்ட ஆய்வேட்டில் விரிவாக வரைந்துள்ளேன்.

பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையிலிருந்து ஓய்வுபெற்ற பிறகு தஞ்சாவூரில் அமைதி வாழ்க்கை வாழ்ந்து வருவதாக நண்பர்கள் வழியாக அறிந்தேன். கல்லூரிப்பணி, தமிழ் இணையம் பரப்பும் பணி, பிற ஆய்வுகள் என ஓய்வின்றி இயங்கும் நான், என் பேராசிரியர் அவர்களைக் கண்டு மகிழும் வேட்கையுடன் பத்தாண்டுகளாகக் காத்துக்கிடக்கிறேன்...

மீண்டும் அவர் நினைவுகளுடனும், படத்துடனும் வருவேன்...



'புதிய உரைநடை' என்னும் நூலின் ஆசிரியர் **எழில்முதல்வன்** (முனைவர் மா. இராமலிங்கம்) ஆவார். [
இந்த நூலுக்காக **1981-ஆம் ஆண்டின் தமிழுக்கான சாகித்திய அகாதமி விருது** இவருக்கு வழங்கப்பட்டது.

ஆதாரங்கள்:

- எழில்முதல்வன் (மா. இராமலிங்கம்) - தமிழ் விக்கி
- சாகித்திய அகாதமி விருது பெற்ற தமிழ் நூல்கள்

உரைநடை வளர்ச்சி

https://www.tamilvu.org/courses/degree/a041/a0414/html/a041461.htm

மக்கள் தொடர்புச் சாதனங்களின் வளர்ச்சியினால் உரைநடை நூல்கள், சிறுகதை, நாவல், நாடகம் போன்றவை மிகுதியாக வெளிவந்தன.

6.1.1 உரைநடை நூல்கள்

ராபர்ட்-டி-நொபிலி, பெஸ்கி எனும் வீரமாமுனிவர், சிவஞான முனிவர், ஆறுமுக நாவலர், இராமலிங்கர், செல்வக்கேசவராய முதலியார் போன்றோரால் தமிழ் உரைநடை வளர்ச்சி பெற்றது.

விடுதலைக்கு முன் கவிதை, கட்டுரை என்ற இரண்டு துறையிலும் புதுமை படைத்தார் பாரதி. அவருக்குப் பின் பலதுறையினைச் சார்ந்தோர் உரைநடை இலக்கியத்தை வளர்த்தனர். வ. ராமசாமி எனும் 'வ.ரா', புதுமைப்பித்தன், சேதுப்பிள்ளை, செகவீர பாண்டியனார், சோமசுந்தர பாரதியார், அண்ணா, மு. கருணாநிதி என்போரின் நடை தமிழ் உரைநடையில் முத்திரை பதித்தவை.

காலந்தோறும் தமிழ் உரைநடை வளர்ந்து வந்துள்ள விதமும் சான்றோரின் கவனத்திற்கு வந்துள்ளது.

- வ.சு. செங்கல்வராய பிள்ளை - தமிழ் உரைநடை வரலாறு.
- வி. செல்வநாயகம் - தமிழ் உரைநடை வரலாறு
- அ.மு. பரமசிவானந்தம் - தமிழ் உரைநடை
- மா. இராசமாணிக்கனார் - இருபதாம் நூற்றாண்டு தமிழ் உரைநடை வளர்ச்சி
- **மா. இராமலிங்கம் - புதிய உரைநடை**
- மு. அருணாசலம் - இன்றைய தமிழ் வசனநடை

என்ற நூல்கள் உரைநடை வகைகள், அவை வளர்ந்த விதம் பற்றி ஆராய்கின்றன. இதன் வளர்ச்சியாக ஜெ. நீதிவாணன் என்பார் **நடையியல்** என்ற நூலை எழுதினார். இ. சுந்தரமூர்த்தி **நடையியல் - ஓர் அறிமுகம்** என்ற நூலை எழுதினார். இதன் பின் பல ஆராய்ச்சி நூல்களும் ஆய்வேடுகளும் வெளிவந்துள்ளன.

6.1.2 உரைநடை முன்னோடிகள்

மேலும் இருபதாம் நூற்றாண்டில் உரைநடையை வளர்த்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர்களைப் பற்றிப் பார்ப்போம்.

- **இ.மு. சுப்பிரமணியப் பிள்ளை**

தமிழ்ப் பெரும் புலவரான இவர், சித்த மருத்துவரும் ஆவார். **உலகப் பொதுமறை, திருக்குறள் ஒழுக்க முறை, உலகப் பொதுச் சமயம், தம்பிரான் தோழர், நெல்லை மாவட்டக் கோவில் வரலாறு, இராமாயண ஆராய்ச்சி, திருமுருகாற்றுப்படை விளக்கவுரை, இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் வரலாறு** (5 பகுதிகள்) முதலியனவற்றை எழுதித் தமிழ் உரைநடையை வளர்த்து உள்ளார். கலைச்சொல்லாக்க மாநாடுகளும், **தமிழ்த்தாய்** என்னும் காலாண்டிதழும் நடத்தினார்.

• **ச. தண்டபாணி தேசிகர்**

இவர் **திருக்குறள் அமைப்பும் அழகும், திருவாசகப் பேரொளி, திருக்குறள் உரைவளம், கணபதி, முருகன், ஆடவல்லான், சக்தி, சைவத்தின் மறுமலர்ச்சி, முதல் திருமுறை, முதற்கடவுள் வினாயகர், முழுமுதற் கடவுள் நடராஜர்** என அறுபதுக்கும் மேற்பட்ட அரிய தமிழ் நூல்களைப் படைத்துள்ளார்.

• **லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார்**

இவர் **கட்டுரைக் கோவை, சங்ககாலத் தமிழர் வாழ்வு, வாழ்க்கை வளம், தொல்காப்பியச் செல்வம், நோக்கு, பத்துப்பாட்டு வளம், சோழவேந்தர் மூவர், எட்டுத் தொகைச் செல்வம்** முதலிய நூல்களைப் படைத்தார்.


• **அ.ச. ஞானசம்பந்தன்**

இவர் **இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும், கம்பன்கலை, நாடும் மன்னனும், அரசியர் மூவர், தம்பியர் இருவர், அகம், புறம், மகளிர் வளர்த்த தமிழ், குறள் கண்ட வாழ்வு, தேசிய இலக்கியம்** போன்ற நூல்களைப் படைத்தவர். **இலக்கியக் கலை** என்ற நூல் வழித் தமிழில் இலக்கியத் திறனாய்வுக்கு வழிவகுத்தவர்.

• **மு. சண்முகம் பிள்ளை**

இவர் **வரலாற்றுமுறைத் தமிழகராதி**யை உருவாக்குவதில் பெரும்பங்கு வகித்தவர். **சிற்றிலக்கிய வளர்ச்சி, சிற்றிலக்கிய வகைகள், அகப்பொருள் மரபும் குறளும், குறள்யாப்பும் பாட வேறுபாடும்** போன்ற பல உரைநடை நூல்களையும் 300-க்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

• **குன்றக்குடி அடிகளார்**



இவர் இந்நூற்றாண்டின் அப்பர் என்று போற்றப் பெறுபவர். **பொதுமைச் சிற்பி. வள்ளுவர் உலகம், குறள் வாழ்வு, உவமை நலம், அப்பர் அமுது**, **திருவாசகத்தேன், புனிதநெறி**, **வாழ்க்கை விளக்கு** என 40க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர். **தமிழகம்** என்ற திங்கள் ஏட்டின் ஆசிரியராகவும் இருந்தார்.

- **மு.மு. இசுமாயில்**



சென்னை கம்பன் கழகத் தோற்றுநர்களில் ஒருவரான இவர் தம் நீதியியல் நோக்கில் இலக்கியப் போக்கினை அணுகி நுணுகி ஆராயும் அறிஞர். **மும்மடங்கு பொலிந்தன, செவிநுகர் கனிகள், மூன்று வினாக்கள், உலகப்போக்கு, இலக்கிய மலர்கள்** போன்ற பல நூல்களை எழுதியுள்ளார்.

- **இராஜாஜி**



இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாகத் திகழ்ந்தவர் இராஜகோபாலச்சாரி. இவர் **விமோசனம்** என்ற மாத இதழை நடத்தினார். **ராஜாஜி கதைகள், ராஜாஜி கட்டுரைகள், ராஜாஜி மணிமொழிகள், ராஜாஜி உவமைகள்**, **பஜகோவிந்தம்,**

பாற்கடல், வள்ளுவர் வாசகம், சக்ரவர்த்தித் திருமகன், பித்தளையும் பொன்னும், வியாசர் விருந்து என 54 நூல்களை எழுதியுள்ளார்.

உரைநடையின் பிற துறைகளான கடித இலக்கியம், பயண இலக்கியம், வாழ்க்கை வரலாற்று இலக்கியம் என்பனவும் காலத்திற்கேற்ப மாற்றங்களுடன் வளர்ந்து வருகின்றன.

6.1.3 சிறுகதை

சிறுகதை வளர்ச்சிக்கு என்று தனி இதழ் தோன்றியுள்ளது. விளம்பரச் சிறுகதைகள், சமூகச் சீர்திருத்தக் கதைகள், புதிய உள்ளடக்கம் கொண்டவை எனச் சிறுகதை பன்முகம் கொண்டு திகழ்கிறது.

- **சுந்தரராமசாமி**

காகங்கள் என்ற இலக்கிய அமைப்பினை நடத்தும் இவர் **அக்கரைச் சீமையில், பிரசாதம், பல்லக்குத் தூக்கிகள், பள்ளம்** என்ற சிறுகதை தொகுதிகளை வெளியிட்டுள்ளார்.

- **கு. அழகிரிசாமி**

திருநெல்வேலி மாவட்டத்தில் வாழும் கிராம மக்களின் வாழ்வையும், பழக்கவழக்கங்களையும் எடுத்துக் காட்டுபவர் கு.அழகிரிசாமி. இவரது **அன்பளிப்பு, திரிவேணி, ராஜா வந்திருக்கிறார்** போன்ற கதைகள் புகழ் பெற்றவை.

- **விந்தன்**

இவர், ஏழைத் தொழிலாளியாகத் தம் வாழ்க்கையைத் தொடங்கிய எழுத்தாளர். மனித நேயம் கொண்டு சமுதாய அவலங்களை விமர்சிப்பவர். **முல்லைக் கொடியாள், ஒரே உரிமை, சமுதாய விரோதி, ஏமாந்துதான் கொடுப்பீர்களா? நாளை நம்முடையது, இரண்டு ரூபாய்** போன்ற கதைத் தொகுதிகளைப் படைத்துள்ளார்.

- **அண்ணா**



அண்ணா

சமுதாயச் சீர்திருத்தத்தை நோக்கமாக உடையவை இவரது கதைகள். போலிச் சமயவாதிகளைச் சாடுதல், மூடப்பழக்க வழக்கங்கள், சகுன, சாதக நம்பிக்கைகளைச் சாடுதல், வர்க்கப் போராட்டம், சமுதாய ஏற்றத்தாழ்வு எனப் பலதரப்பட்ட கருத்துகளைக் கூறுபவை இவரது கதைகள். **செவ்வாழை**, **சொர்க்கத்தில் நரகம்**, **பேய் ஓடிப்போச்சு**, **சொல்வதை எழுதேன்டா**, **ராஜபார்ட் ரங்கதுரை** போன்றவை புகழ்பெற்ற கதைகள்.

- **மு. கருணாநிதி**



இவர் **பழக்கூடை**, **தன்னடக்கம்**, **வாழ முடியாதவர்கள்**, **சங்கிலிச்சாமி**, **கிழவன் கதை**, **அரும்பு**, **முதலைகள்**, **தப்பிவிட்டார்கள்**, **நளாயினி** போன்ற சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார்.

- **அகிலன்**



கதை அமைப்பிலும் பாத்திரப் படைப்பிலும் நடையிலும் தனித்தன்மை பெற்றவர் எனத் தெ. பொ. மீனாட்சி சுந்தரம் அவர்களால் பாராட்டப் பெற்ற அகிலன் 18 சிறுகதைத் தொகுதிகளை எழுதியுள்ளார். **குழந்தை சிரித்தது**, **சகோதரர் அன்றோ**,

ஒருவேளைச் சோறு, **நெல்லூர் அரிசி**, **ஆண் - பெண்**, **எரிமலை** என்பன அவற்றுள் சில.

• **ஜெயகாந்தன்**



தமிழ்ச் சிறுகதையில் தனக்கென ஒரு தடம் பதித்த எழுத்தாளர் இவர். **உதயம்**, **ஒரு பிடிசோறு**, **இனிப்பும் கரிப்பும்**, **தேவன் வருவாரா**, **சுமைதாங்கி**, **மாலைமயக்கம்**, **யுகசந்தி**, **புதிய வார்ப்புகள்**, **குருபீடம்** என்பன போன்ற பல தொகுதிகளை வெளியிட்டுள்ளார்.

• **சு. சமுத்திரம்**



சமூக அங்கத எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவர். இவர், வர்க்கப் போராட்டம் பற்றிப் பல சிறுகதைகளைப் படைத்துள்ளார். **குற்றம் பார்க்கில்**, **உறவுக்கு அப்பால்**, **ஒரு சத்தியத்தின் அழுகை**, **காகித உறவு** என்ற சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். **ஒரே ஒரு ரோஜா**, **போதும் உங்க உபகாரம்** என்பன சிறந்த சிறுகதைகள்.

• **பிறர்**

இவர்களைத் தவிர சுஜாதா, ஆதவன், ரா.கி.ரங்கராஜன், வண்ணதாசன், வண்ண நிலவன், பாவண்ணன், மேலாண்மை பொன்னுச்சாமி, பூமணி, அம்பை, திலகவதி போன்றோரும் சிறுகதை எழுதி வருகின்றனர்.

மொழிபெயர்ப்பின் மூலம் பல நல்ல சிறுகதைகள் தமிழில் அறிமுகம் ஆகியுள்ளன. சாகித்ய அகாதெமியும், நேஷனல் புக் டிரஸ்ட்டும், இலக்கியச் சிந்தனை அமைப்பும் தமிழ்ச் சிறுகதை நூல்களை வெளியிட்டு வருகின்றன.

6.1.4 நாவல்

தொடக்கக்கால நாவல்களைப் பின்பற்றியே விடுதலைக்குப் பின்னும் நாவல்கள் எழுதப்பட்டாலும் ஆன்மீக நாவல், தெய்வீக நாவல், காந்தீய நாவல்கள், இன-வட்டார, வர்க்க, அறிவியல், நனவோடை எனப் பல்வகையில் நாவல் வளர்ச்சி அடைந்தது. எனினும் இவற்றை வரலாற்று, சமுதாய, அரசியல் நாவல்கள் என்ற பிரிவிற்குள் அடக்கி விடலாம். முதல் மானிடவியல் நாவலான **குறிஞ்சித்தேன்**, சத்தியாக்கிரகம் பற்றிய நாவலான **பலாத்காரம்** போன்ற சில நாவல்கள் குறிப்பிடத்தக்கன.

• அரு. ராமநாதன்

வீரபாண்டியன் மனைவி என்ற நாவலைப் பத்து ஆண்டுகளாகத் தொடர்கதையாக எழுதினார். **அசோகன் காதலி, குண்டுமல்லிகை, நாயனம், சௌந்தரவடிவு** என்ற நாவல்களையும் எழுதியுள்ளார்.

• அண்ணா



குமரிக்கோட்டம், பார்வதி பி.ஏ, ரங்கோன் ராதா, கபோதிபுரக் காதல், குமாஸ்தாவின் பெண், கலிங்கராணி போன்ற நாவல்களை எழுதியுள்ளார்.

• கொத்தமங்கலம் சுப்பு

தில்லானா மோகனாம்பாள், ராவ்பகதூர் சிங்காரம், பந்தநல்லூர் பாமா, மிஸ் ராதா ஆகிய நாவல்கள் படைத்த இவர் நடிகர்; இயக்குநர்.

• மு.வரதராசனார்

செந்தாமரை, கள்ளோ? காவியமோ?, அந்தநாள், அல்லி, மலர்விழி, பாவை, கரித்துண்டு, வாடாமலர், அகல்விளக்கு, கயமை, பெற்றமனம் என்ற நாவல்களை எழுதினார்.

• **தி. ஜானகிராமன்**

அமிர்தம், மோகமுள், அன்பே ஆரமுதே, அம்மா வந்தாள், உயிர்த்தேன், செம்பருத்தி, மலர்மஞ்சம், மரப்பசு போன்ற நாவல்களில் தஞ்சை மண்ணின் மணம், பேச்சு, ஆண் - பெண் உறவுச் சிக்கல்கள் அழகாகச் சித்தரிக்கப் பெற்றுள்ளன.

• **ஜெகசிற்பியன்**

ஜீவகீதம், மண்ணின் குரல், கிளிஞ்சல் கோபுரம், காணக் கிடைக்காத தங்கம், சொர்க்கத்தின் நிழல், காவல் தெய்வம், இனிய நெஞ்சம், தேவதரிசனம், நாயகி நற்சோணை, மகரயாழ் மங்கை, பத்தினிக்கோட்டம், நந்திவர்மன் காதலி எனச் சமூகப் புதினங்களும் வரலாற்றுப் புதினங்களும் படைத்துள்ளார்.

• **சாண்டில்யன்**



ஐம்பது நாவல்கள் படைத்திருந்தாலும் **யவன ராணி, உதய பானு, கன்னிமாடம், மலைவாசல், ஜலதீபம், ராஜதீபம், பல்லவ திலகம், ஜீவபூமி, மஞ்சள் ஆறு** போன்றவை குறிப்பிடத்தக்கன.

• **தமிழ்வாணன்**



இவர் சங்கர்லால் என்ற துப்பறியும் நிபுணரைக் கற்பனையாகப் படைத்து உலவ விட்டவர். **கருநாகம், கருகிய கடிதம், சங்கர்லால் துப்பறிகிறார், கடலில் தெரிந்த கை, துப்பாக்கி முனை** என 76 மர்ம நாவல்கள் படைத்துள்ளார்.

• **க.நா. சுப்ரமணியம்**

பசி, பொய்த்தேவு, ஏழுபேர், ஒருநாள், அசுரகணம், விடுதலையா?, வாழ்ந்தவர் கெட்டால், அவரவர் பாடு, ஆட்கொல்லி, இரண்டு பெண்கள், குறுக்குச்

சுவர், பெரிய மனிதன் என்பன இவரின் நாவல்கள். இவர் சிறந்த மொழிபெயர்ப்பாளரும் ஆவார்.

• **லா.ச. ராமாமிருதம்**



புத்ர, **அபிதா**, **கல்சிரித்தது**, **பாற்கடல்** என்ற இவரது நாவல்களில் இருண்மைப் பண்பு படர்ந்திருக்கும். தமது மந்திரச் சொற்களால் படிப்பவரை மயங்க வைத்து விடுகிறார். இவர் புறநிகழ்ச்சிகளை விட அகவுணர்வுகளுக்கு முக்கியத்துவம் தருபவர்.

• **அகிலன்**



தன் நாவல்களில் எல்லாம் பெண்மைக்கே முதலிடம் தந்தவர் இவர். **பாவை விளக்கு**, **சித்திரப்பாவை**, **எங்கே போகிறோம்**, **பொன்மலர்**, **வெற்றித் திருநகர்**, **பால்மரக் காட்டினிலே** என 20 நாவல்களைப் படைத்தவர்.

• **கோ.வி. மணிசேகரன்**

இதுவரை 130 நாவல்கள் படைத்திருந்தாலும், வரலாற்றுப் புதின ஆசிரியராகவே போற்றப்படுகிறார். இவரது நாவல்களில், **ஒரு தீபம் ஐந்து திரிகள்**, **செம்பியன் செல்வி**, **செஞ்சி அபரஞ்சி**, **அசோகச் சக்கரம்**, **முதல்வர்** போன்றன குறிப்பிடத்தகுந்த நாவல்கள்.

• **இந்திரா பார்த்தசாரதி**



தலைநகரை மையமாகக் கொண்டு நாவல் படைத்தவர். **கால வெள்ளம், தந்திரபூமி, சுதந்திரபூமி, குருதிப்புனல், கானல்நீர், வேஷங்கள்** என்பன அவற்றுள் சில.

• **நா. பார்த்தசாரதி**

பாண்டிமாதேவி, மணிபல்லவம், வஞ்சிமாநகர், கபாடபுரம், நித்திலவல்லி என 5 வரலாற்று நாவல்களும் **ஆத்மாவின் ராகங்கள், சத்திய வெள்ளம், நெஞ்சக்கனல், அனிச்சமலர், நீலநயனங்கள், குறிஞ்சிமலர்** என 20 சமூக நாவல்களும் படைத்தார்.

• **ஜெயகாந்தன்**

வாழ்க்கை அழைக்கிறது, பாரிசுக்குப் போ, உன்னைப் போல் ஒருவன், யாருக்காக அழுதான், சில நேரங்களில் சில மனிதர்கள், ரிஷிமூலம், ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம், சினிமாவுக்குப் போன சித்தாளு, ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் என்ற இவரது நாவல்கள் புகழ் பெற்றவை. 1986இல் ராஜராஜன் விருது பெற்றார்.

• **சுஜாதா (எஸ். ரங்கராஜன்)**



நைலான் கயிறு, அனிதா இளம் மனைவி, ஜன்னல் மலர், ப்ரியா, அப்ஸரா, ஒரு விபரீதக் கோட்பாடு, மேகத்தைத் துரத்தியவன், கொலையுதிர் காலம், மறுபடியும் கணேஷ், தேடாதே, விக்ரம் போன்ற பல நாவல்களைப் படைத்துள்ளார். துப்பறியும் பாங்கும் பாலுணர்வும் அறிவியல் நுட்பங்களும் கலந்துவரக் கதைகள் படைப்பதில் வல்லவர்.

• **பிறர்**

இவர்களைத் தவிர அசோகமித்ரன், நீல. பத்மநாபன், சா. கந்தசாமி, கி. விட்டல்ராவ், பாலகுமாரன், பிரபஞ்சன் ஆகியோரும் நாவல்களைப் படைக்கின்றனர். பெண் எழுத்தாளர்களில் அநுத்தமா, ராஜம் கிருஷ்ணன், ஹெப்சிபா ஜேசுதாசன், சூடாமணி, லட்சுமி, வசுமதி ராமசாமி, குகப்பிரியா, கோமகள், சி.ஆர். ராஜம்மா, வாஸந்தி, சிவசங்கரி, இந்துமதி, அனுராதா ரமணன், பாமா, சிவகாமி, திலகவதி போன்றோரும் ஜனரஞ்சக, சமுதாயச் சிந்தனைமிக்க நாவல்களைப் படைத்துள்ளனர்.

6.1.5 நாடகம்

விடுதலைப் போரில் குறிப்பிடத்தக்க பங்காற்றிய நாடகத் தமிழானது விடுதலைக்குப் பின் பல்வேறு பிரிவுகளாகச் செழித்து வளர்ந்தது. நவாப். டி. எஸ். ராஜமாணிக்கம் தெய்வீகமும் தேசீயமும் கலந்த நாடகங்களைப் படைத்தார். எஸ்.வி. சகஸ்ரநாமம், ஆர். எஸ். மனோகர், எம்.ஆர். ராதா, சோ, கே. பாலச்சந்தர், பி.எஸ். ராமையா, எஸ்.டி. சுந்தரம், அரு. ராமநாதன், ரா. வேங்கடாசலம், கோமல் சுவாமிநாதன், கோரா, பூர்ணம் விசுவநாதன், மெரீனா போன்றோர் குறிப்பிடத்தகுந்தவர்கள்.

நாடகமானது புராண, பக்தி, சமூக, சீர்திருத்த, இலக்கிய, கவிதை, வரலாற்று, அங்கத, பிரச்சார, நகைச்சுவை நாடகம் எனப் பலவாறு வளர்ந்து உள்ளது. நாட்டிய நாடகங்களும் அதன் ஒரு வகையான பாகவத மேளாவும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெற்றுள்ளன. கு.சா. கிருஷ்ணமூர்த்தி எழுதிய **அந்தமான் கைதி**, புதுமைப்பித்தனின் **வாக்கும் வக்கும்**, நாமக்கல் கவிஞரின் **மாமன்மகள்**, கண்ணதாசனின், **புவனமுழுதுடையாள்**, மு.வரதராசனாரின் **பச்சையப்பர்** என்ற நாடகங்கள் குறப்பிடத்தக்கன.

• **புதுவகை நாடகங்கள்**

1973 முதல் மரபு முறையில் கூத்தினை உருவாக்கும் நோக்கில் அமைக்கப்பட்ட கூத்துப்பட்டறை (Theatre Workshop) நாடகம் நடத்துவதோடு கூத்தின் வரலாறு பற்றி ஆராய்கிறது; கலந்து உரையாடுகிறது; கருத்தரங்கும் நடத்துகிறது. ஞாநி அவர்களைத் தலைமையாகக் கொண்ட பரீக்ஷா குழுவினர் தனிமனிதச் சிக்கலை, அங்கத நாடகங்களாகத் தந்து வருகின்றனர். பாதல் சர்க்காரை முன்னோடியாகக் கொண்ட வீதிநாடகக் குழு பொதுமக்களுக்காக நாடகம் நடத்தி வருகிறது. இயலிசை நாடக மன்றம் நாடகக் கலைக்கும் நாடகக் கலைஞர்களுக்கும் ஆதரவு தருகிறது. எனவே நாடகக் கலையானது அழியாமல் வளர்ந்து வருகிறது.

6.1.6 மொழிபெயர்ப்பு

சென்றிடுவீர் எட்டுத்திக்கும் என்பதற்கு ஏற்ப, விடுதலைக்குப் பின் தமிழ் இலக்கியத்தில் மொழிபெயர்ப்பு வளம் பெற்றது. பல மொழிகளில் இருந்து சிறுகதை, நாவல், கட்டுரை, நாடகம், கவிதை என்பன தமிழுக்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டன. படைப்பாளிகளாக இருந்த பாரதியார், புதுமைப்பித்தன் போன்றோரும் இதற்கு வழிகாட்டினர். ஆன்மீகச் செய்திகள், இலக்கியங்களும் கூட மொழிபெயர்ப்பு செய்யப் பெற்றதால் தமிழ் வளமடைந்தது.

• ச. தண்டபாணி தேசிகர்

திருவாவடுதுறை ஆதீன மகாவித்வானாக விளங்கி 60-க்கும் மேற்பட்ட நூல்கள் படைத்துள்ள இவர், வடமொழியிலிருந்து **முருகன் அணியியல்** (பிரதாப ருத்ரீயம்), **பரதநாட்டிய சாத்திரம்**, **சச்சபுட வெண்பா**, **தாளசாத்திரம்** என்ற நூல்களை மொழிபெயர்த்துத் தந்துள்ளார். Introduction to Thirumanthiram என்ற நூலையும் எழுதியுள்ளார்.

• பெ. நா. அப்புஸ்வாமி

வழக்கறிஞரான இவர், சங்க இலக்கியங்களைப் புதுமுறையில் அழகும் ஆற்றலும் பொருந்த ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். அறிவியல் செல்வங்களை எல்லாம் எளிய தமிழில் கலைமகள், தினமணி போன்றவற்றில் கட்டுரைகளாக எழுதி வந்தார். **வாழ்வில் விஞ்ஞானம்**, **காலயந்திரம்**, **அணுவின் கதை** என 70 நூல்கள் படைத்துள்ளார்.

• வன்மீகநாதன்

தமிழ்ச் சமய நூற்களை ஆங்கிலத்தில் தரும் இவர் தமிழாக்கங்களும் செய்துள்ளார். Pathway to God through Thiruvachakam, Pathway to God by Ramalinga Swamikal, Manickavachakar - a Monograph என்ற நூல்களும் இந்தி ஆத்மகதாவின் தமிழ் மொழிபெயர்ப்பும், திருக்குறளின் ஆங்கில மொழிபெயர்ப்பும் செய்துள்ளார்.

• கா. அப்பாத்துரையார்

பன்மொழிப் புலவரான இவர், 90 மொழிபெயர்ப்பு நூல்களைப் படைத்துள்ளார். **மாலதிமாதவம்**, **செஞ்சி இளவரசன்**, **இந்துலேகா**, **குழந்தை உலகம்**, **செஸ்டர்பீல்டின் கடிதங்கள்**, **சேக்ஸ்பியர் கதைக் கொத்து**, **விந்தைக் கதைகள்** என்பன சில.

• மு.ரா. பெருமாள் முதலியார்

கலைச்சொற்கள் படைப்பதில் பெரும்பங்காற்றிய இவர், **இந்திய வரலாற்றுச் சுருக்கம்**, **நமது இந்தியா**, **வேலைச் செல்வம்**, **கூலி**, **ருப்யார்டு கிப்ளிங் கதைகள்**,

தென்னிந்திய வரலாறு, தென்னிந்தியா பற்றி வெளிநாட்டவர் குறிப்புகள் என்ற நூற்களை மொழி பெயர்த்துத் தந்துள்ளார்.

- **த.நா. குமாரஸ்வாமி**

பன்மொழி அறிந்தவரான இவர் வடமொழி நாகானந்தத்தைத் தமிழில் தந்தவர். போஜ சரித்திரத்தைத் தமிழில் எழுதியவர். சிலம்பை வங்கமொழியில் மொழிபெயர்ப்பு செய்துள்ளார். தாகூரின் 12 நாவல்களையும் பல சிறுகதைகளையும் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். புதிய வங்க எழுத்தாளர்களைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியுள்ளார் இவரைப் போன்றே ஆர். சண்முக சுந்தரம் என்பவரும் வங்கமொழி நாவல்களைத் தமிழில் மொழி பெயர்ப்பு செய்துள்ளார்.

- **க.நா. சுப்ரமணியம்**

இவர் அன்புவழி (ஸ்வீடிஷ்), தபால்காரன் (பிரெஞ்சு), உலகத்துச் சிறந்த நாவல்களை மொழி பெயர்த்துள்ளார்.

- **கா.ஸ்ரீ.ஸ்ரீ**

மராத்திய இலக்கியத்தைக் குறிப்பாகக் காண்டேகரைத் தமிழில் தந்தவர். இந்திக் கதைகளையும் தமிழில் தந்துள்ளார். பாரதியின் **தராசு, சிவபோகசாரம், சொக்கநாத வெண்பா** என்பவற்றை இந்தியில் அளித்துள்ளார்.

- **த.நா. சேனாதிபதி**

வங்க இலக்கியங்களை, தாகூரைத் தமிழில் தந்தவர். தாகூரின் கட்டுரைகள், கதைகள், தாராசங்கர் பானர்ஜி கதைகள் என்பவற்றைத் தமிழாக்கம் செய்துள்ள இவர் கண்ணப்பரின் வரலாற்றை வங்காளத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

- **சரஸ்வதி ராம்னாத்**

தமிழிலிருந்து இந்திக்கும் இந்தியிலிருந்து தமிழுக்கும் மொழிபெயர்ப்புச் செய்தவர். கம்பராமாயணத்தை இந்தியில் மொழி பெயர்த்துத் தந்திருக்கின்றார்.

- **பிறர்**

இவர்களைத் தவிரத் தமிழில் சேக்ஸ்பியர் நாடகங்களைப் பலர் மொழி பெயர்த்துள்ளனர். காளிதாசர், சூத்ரகர், பாசன் என்பவர்களது நாடகங்களும் கிரேக்க நாடகங்களும் தமிழில் பலரால் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளன. சாகித்ய அகாதெமியும் நேஷனல் புக் டிரஸ்டும் ஒவ்வொரு மொழியிலும் உள்ள சிறந்த படைப்புகளைப் பிறமொழிகளுக்கு அறிமுகப்படுத்துவதில் முனைந்து நிற்கின்றன.

• **மொழிபெயர்ப்புகளின் எண்ணிக்கை**

மொத்தத்தில் நாற்பது மொழிகளிலிருந்து அறிவியல் இலக்கியப் படைப்புகள் வந்துள்ளன. 2000க்கும் மேற்பட்ட இலக்கியங்கள் மொழிபெயர்ப்புச் செய்யப் பெற்றுள்ளன. 550 நாவல்கள், 300 சிறுகதைத் தொகுதிகள், 250 நாடக நூல்கள் மொழிபெயர்ப்பாகித் தமிழில் வந்துள்ளன. தமிழில் இருந்து 730 நூல்கள் பிற மொழிகளுக்குச் சென்றுள்ளன. தமிழிலிருந்து பக்தி இலக்கியம்தான் மிகுதியாக மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. எனினும் பாரதி கவிதைக்கு மட்டும் 15 மொழிபெயர்ப்புகள் ஆங்கிலத்தில் உள்ளன. இது மொழி பெயர்ப்பின் வளமான எதிர்காலத்தையே காட்டுகிறது.

6.1.7 திறனாய்வு

திறனாய்வு என்ற வகை தமிழிலேயே உண்டு என்று வாதிடுவோரும் திறனாய்வு என்பது மேலை இலக்கியத் தாக்கத்தால் நாம் பெற்றது என்று கூறுவோரும் உண்டு. எவ்வாறு ஆயினும் மேலை நாட்டு இலக்கியக் கொள்கைகளைத் தமிழ் இலக்கியப் படைப்புகளில் ஏற்றி அல்லது பொருந்திப் பார்க்கும் செயலே திறனாய்வுத் தமிழாகத் தற்போதைக்கு உள்ளது. தமிழ்ப் பேராசிரியர்கள் சிலர் "தமிழிலே இலக்கியத் திறனாய்வு" என்ற துறையைத் தொடக்கி வைக்கச் சிலர் அதை விமர்சனத் தமிழாக வளர்த்தனர். சில அறிஞர்கள் தாங்கள் சார்ந்து உள்ள கொள்கை விளக்கச் சாதனமாக இலக்கியத்தை எடுத்துக் கொண்டனர். மேலும் சில அறிஞர்கள் தாங்கள் விரும்பும் இலக்கியம் அல்லது துறையிலே ஆழ்ந்த புலமையுடன் திறனாய்வு செய்து பெயர் பெற்றனர். இந்திய இலக்கியச் சான்றோர்களை ஒப்பிட்டுத் திறனாய்வு செய்து புகழ் பெற்றவர் பி.ஸ்ரீ. அவர்கள்.

இனி குறிப்பிடத்தகுந்த திறனாய்வு நூல்களும் ஆசிரியர்களும் பற்றிக் காண்போம்.

- ஆ. முத்துச்சிவன் - கவிதையும் வாழ்க்கையும்
- அ.ச. ஞானசம்பந்தன் - இலக்கியக் கலை
- மு. வரதராசனார் - இலக்கிய மரபு, இலக்கியத்திறன், இலக்கிய ஆராய்ச்சி
- கோதண்டராமன் - இலக்கியமும் விமர்சனமும்

தா.ஏ. ஞானமூர்த்தி, ந. சஞ்சீவி, க. கைலாசபதி, தி.சு. நடராசன், க. பஞ்சாங்கம் போன்றோர் இலக்கியத் திறனாய்வுக்கும் இலக்கியக் கொள்கைகளுக்கும் வழி காட்டியவர்கள்.

புதுமைப்பித்தன், க.நா. சுப்பிரமணியன், சிதம்பரரகுநாதன், சி.சு. செல்லப்பா, தா.வே. வீராசாமி, சி. கனகசபாபதி, தி.க. சிவசங்கரன், எழில் முதல்வன், வெங்கட்சாமிநாதன் போன்றோர் இலக்கியத் திறனாய்விற்கு வழி வகுத்தவர்கள்.

க. கைலாசபதி எழுதிய **இருமகாகவிகள், நாவல் இலக்கியம்** என்ற இரு நூல்களும் நா. வானமாமலையின் **ஆய்வுக் கட்டுரைகளும்** சிறப்புடையன.

வெளிவந்த நூல்கள்

- நாவல் இலக்கியம் (1972)
- இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்(1973)
- புனைகதை வளம்(1973)
- அகிலனின் கலையும் கருத்தும்(1974)
- விடுதலைக்குப்பின் தமிழ்ச்சிறுகதைகள்(1977)
- புதிய உரைநடை(1978)
- இலக்கியத் தகவு(1979)
- திறனாய்வுநெறி(1983)
- நோக்குநிலை(1984)
- உரைகல்லும் துலாக்கோலும்(1989)
- பனிப்பாறையும் சில தீப்பொறிகளும்(1990)
- கவண்கற்களும் சிறகுகளும்(2000)

கவிதைகள்

- இனிக்கும் நினைவுகள்(1966)
- எங்கெங்கு காணினும்(1982)
- இரண்டாவது வருகை(1985)
- யாதுமாகி நின்றாய்(1986)
- தமிழ்க்கனல்(1987)
- எழில்முதல்வன் கவிதைகள்(2000)

புனைகதை நூல்கள்

- பொய்யான இரவுகள்(1973)
- அதற்கு விலையில்லை(1974)
- நாளைக்கும் இதே கியூவில்(1985)
- வாழ்க்கை வரலாறு
- பேராசிரியரியப் போராளி(2013)


மொழிபெயர்ப்பு நூல்கள்

- மகாகவி உள்ளூர்(1986)
- ஜதீந்திரநாத் சென்குப்தா(1992)
- பாபா பரீத்(1994)
- நிச்சய தாம்பூலம்(2008)
- பொழுது புலர்ந்தது(2009)
- பாகிஸ்தான் கதைகள்(2010)
- கபீரின் நூறு பாடல்கள்(2011)
- கிழக்கு- மேற்கு பாகம்1(அச்சில்)

பதிப்பித்த நூல்கள்

- Selected Poems of Bharathidasan(in English)
- Bharathidasan Centenary Souvenir(1991)
- Velvi (வேள்வி) A Collection of seminar Papers in Tamil(1991)
- Medieval Indian Literature in English Translation, Tamil Literature(1100-1800).
- உலகத் திருக்குறள் மாநாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகள்(2000)
- உலகத் திருக்குறள் மாநாட்டு மலர்
- பகவத் கீதை வெண்பா(2004)

இலக்கியப் பணி



மா.இராமலிங்கம் பெருமழைப் புலவருக்கும் கவிஞர் சுரதாவுக்கும் நெருங்கிய நண்பராக இருந்தார். பாரதிதாசன்

நடத்திய *குயில்* பத்திரிக்கையில் வெளிவந்த எழில்முதல்வனின் முதல் கவிதையைப் பாராட்டி பாவேந்தர் எழுதிய குறள் வெண்பா

எழில்முதல்வன் நல்லநல்ல செய்யுள் எழுதும்
தொழில்முதல்வன் ஆகின்றான் சூழ்ந்து

எழில்முதல்வனின் முதல் கவிதை தொகுப்பு 1965-ல் வெளியானது. கவிஞர் சுரதா நடத்திய 'இலக்கியம்' என்னும் இதழில் பல கவிதைகளை எழுதினார்.

தமிழ் இலக்கிய விமர்சனம் குறித்து ஏழு புத்தகங்கள் எழுதினார். இவரது நவீன தமிழ் உரைநடை பற்றிய இலக்கிய விமர்சன நூலான 'புதிய உரைநடை' 1981-ம் ஆண்டில் தமிழுக்கான சாகித்திய அகாதெமி விருது பெற்றது.

பல மாநிலங்களில் கருத்தரங்குகள் மற்றும் பணிமனைகளில் ஆய்வறிஞராகப் பங்காற்றினார். மலேசியா, யுகோஸ்லேவியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் கருத்தரங்குகளில் பங்கு பெற்றார்.

இந்திய இலக்கியங்களை ஆங்கில முலத்திலிருந்து தமிழில் மொழியாக்கம் செய்தார். இரவீந்திரநாத் தாகூரின் *கபீர்தாசரின் நூறு பாடல்கள்* என்ற நூலை, ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்தார். இந்நூலை தாகூரின் 150-ஆவது பிறந்த ஆண்டான 2011- ல் 'தமிழ் அலை' பதிப்பகம் வெளியிட்டது.

இதழியல்

மா. இராமலிங்கம் 'ஓங்குதமிழ்' என்னும் இதழின் ஆசிரியராக இருந்தார். புவனேஸ்வர் நகரத்திலிருந்து வெளிவந்த உதயதாரகை என்னும் ஆங்கில இதழின் பதிப்பாசிரியர் குழுவில் இரண்டாண்டுகள் இருந்து பணிசெய்தார்.

புவனேஸ்வரிலிருந்து வெளிவந்த *உதயதாரகை* என்னும் ஆங்கில இதழின் பதிப்பாசிரியர் குழுவில் இரண்டாண்டுகள் பணிசெய்தார்.

அமைப்புப்பணிகள்

- 1988-92 ஆண்டுகளில் சாகித்ய அகாதெமியின் பொதுக்குழு உறுப்பினராகவும் செயற்குழு உறுப்பினராகவும் இருந்தார்.
- கி.ஆ.பெ. விசுவநாதம் நடத்திய 'தமிழகப் புலவர் குழு' என்னும் அமைப்பில் இருபதாண்டுகள் உறுப்பினராக இருந்தார்.

















தமிழ் இணையக் கல்விக்கழகம்
தமிழ் வளர்ச்சித் துறை

இராமலிங்கம் என்கிற
எழில் முதல்வன்

https://tamildigitallibrary.in/nationalisedbooks/author-detail/187



ஆசிரியர் பற்றிய விவரம்

ஆசிரியர் பற்றிய விவரம்

ஆசிரியர் பெயர்	இராமலிங்கம் என்கிற எழில் முதல்வன்
பிறப்பு - இறப்பு	1930, அக்டோபர் 5 --
பெற்றோர்	வ. மாணிக்கம் - மா. இராமாமிருத அம்மையார்
வாழ்க்கைத் துணை	கமலா
பணி	பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர், பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் த
பதவிகள்	சாகித்திய அகாதெமி செயற்குழு உறுப்பினர், சாகித்திய அகாதெமி பொதுக்குழு உறுப்பினர், தமிழகப் புலவர் குழு உறுப்பினர்
குறிப்பிடத்தக்க படைப்புகள்	நாவல் இலக்கியம், புதிய உரைநடை,யாதுமாகிநின்றாய், பொய்யா இரவுகள்
பிறந்த ஊர்	தகட்டூர்
வட்டம்	திருத்துறைப்பூண்டி
மாவட்டம்	திருவாரூர்
மாநிலம்	தமிழ்நாடு
நாடு	இந்தியா
விருதுகள் / பட்டங்கள்	தமிழ்நாடு அரசின் பாவேந்தர் பாரதிதாசன் விரு விருது, பாண்டித்துரைத்தேவர் விருது, மகாவித் மீனாட்சிசுந்தரம் பிள்ளை விருது, திசை எட்டும் விருது, தமிழ் வளர்ச்சித்துறைப் பரிசு, தமிழ்மா ஆய்புல அண்ணல், குறள் ஞாயிறு
நாட்டுடைமை ஆண்டு	2024

காணொளிகள்

01] **உரைநடையின் அணிநலன்கள் / மா. ராமலிங்கம்**

https://www.youtube.com/watch?v=0SDiNOhkh3c [27:09]

02] **ஆசிரியர் நியமனத் தேர்வு| மா.இராமலிங்கம் புதிய உரைநடை பகுதி**

https://www.youtube.com/watch?v=KrV3GsjwHjI [16:53]

03] **புதிய உரைநடை | மா.ராமலிங்கம் | முனைவர் விமலா அண்ணாதுரை**

https://www.youtube.com/watch?v=plLDQOWsTKI [43:35]

Day 22 | 1981 ஆம் ஆண்டு சாகித்ய அகாதமி விருது பெற்ற மா.ராமலிங்கம் அவர்களின் புதிய உரைநடை நூலைப் பற்றி முனைவர் விமலா அண்ணாதுரை அவர்கள் சிறப்புரை.

(😊)(😊) மா இராமலிங்கம் (😊)(😊)

